திருவண்ணாமலையில்

# பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி

## கலெக்டர் தொடங்கி வைத்தார்



திருவண்ணாமலையில் நேற்று நடந்த பிளாஸ்டிக் விழிப்புணர்வு பேரணியை கலெக்டர் கே.எஸ்.கந்தசாமி தொடங்கி வைத்தார். உடன் உதவி கலெக்டர் (பயிற்சி) எம்.பிரதாப், நகராட்சி ஆணையாளர் பாரிஜாதம்.

திருவண்ணாமலை, ஜன.10: திருவண்ணாமலையில் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் குறித்த விழிப்புணர்வு பேரணி நேற்று நடந்தது. இதை கலெக்டர் கந்தசாமி தொடங்கி வைத்தார்.

திருவண்ணாமலையில் நகராட்சி சார்பில் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் குறித்த விழிப்புணர்வு பேரணி நேற்று நடந்தது. அண்ணாமலையார் கோயில் ராஜகோபுரம் அருகில் இருந்து புறப்பட்ட பேரணியை கலெக்டர் கே.எஸ். கந்தசாமி தொடங்கி வைத்து பங்கேற்றார்.

உதவி கலெக்டர் (பயிற்சி) எம்.பிரதாப், நகராட்சி ஆணையாளர் பாரிஜாதம், துப்புரவு ஆய்வாளர்கள் இரா.ஆல்பர்ட், வினோத்கண்ணா, கார்த்திகேயன், மதன்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பேரணியில் தடை செய்யப்பட்ட பொருட்கள் அனைத்தையும் பொதுமக்கள் பார்க்கும் வண்ணம் தொங்கவிட்டும், எமன் போல் வேடமணிந்து 'பிளாஸ்டிக் எமன்' போன்று என விழிப்புணர்வு ஏற்படுத்தினர். பேரணி மாடவீதியை சுற்றி வந்து மீண்டும் அண்ணாமலையார் கோயில் ராஜகோபுரம் முன் முடிவடைந்தது.